**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.127/2023 PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஷ்னுவர்தன் | த-பெ /க.பெ. | பட்டாபிராமன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 44/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மேனேஜர், HDFC வங்கி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025**

-------------------------------------------------------------------------------------------------------

**25.09.2025**

**முதல் விசாரணை:**

1) நான் தேவக்கோட்டையில் வசித்து காரைக்குடியில் உள்ள HDFC வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். புகார்தாரர் எனது வங்கி கிளையில் கடந்த 10 ஆண்டுகளாக வங்கி கணக் குவைத்துள்ளார். காசோலை எண் 000001 என்ற இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அரிமளம் கிளையின் காசோலையை 24.07.2023 அன்று புகார்தாரர் எங்களது வங்கி கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தார். மேற்படி காசோலை கடந்த 24.07.2023 அன்று எதிரியின் வங்கியால் stop payment என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 தான் மேற்படி திருப்பட்டதற்கான ஆவணம் ஆகும்.

**குறுக்கு விசாரணை**

1) புகார்தாரரின் வங்கி கணக்கு பட்டியல் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். அதில் 01.07.2023 முதல் 31.08.2024 வரை உள்ளது. 2022 ம் ஆண்டிற்கான கணக்கு பட்டியல் கொண்டுவரவில்லை என்றால் சரிதான் அழைப்பாணையில் கேட்கப்படவில்லை அதனால் கொண்டுவரவில்லை. அழைப்பாணை அனுப்பினால் 2022 ற்கான கணக்கு பட்டியலை எடுத்து வர தயாராக இருக்கிறேன். ம.சா.ஆ.1 ஆவணம் stop payment என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரிதான். வழக்கு காசோலை ஒரு முறை மட்டும்தான் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.25 15:07:05 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.126/2023 PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயக்குமார் | த-பெ /க.பெ. | ஆண்டாலியார் |
| ஊர்: | : | நடுவிக்கோட்டை | சமயம்: | |
| வயது: | : | 57/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பேக்கரி | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025**

-----------------------------------------------------------------------------------------------------

**25.09.2025**

**முதல் விசாரணை:**

1) நான் புகார்தாரர் தரப்பு 3 வது சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொல்லியதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 54/2024 PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகானந்தம் | த-பெ /க.பெ. | தியாகராஜன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025**

---

**21.08.2025**

**முதல் விசாரணை:**

1) 05.11.2022 அன்று கோவிலுக்கு சென்று விட்டு என் நண்பர் சோமசுந்தம் வீட்டிற்கு சென்றேன். அப்போது அங்கு எதிரி கோகிலா என்பவரும் என் நண்பர் சோமசுந்தரமும் பேசிக்கொண்டிருந்தார்கள். என் நண்பர் சோமசுந்தரம் எதிரிக்கு சுமார் ரூ.9 லட்சம் பணம் கொடுத்தார். ஒரு வருடத்திற்குள் திருப்பி தருவதாக எதிரி சொன்னார். மேற்படி தொகையை எதிரி அவரது குடும்ப செலவிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும் பெறுவதாக சொன்னார். அதற்கு எதிரி கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1) நான் B.A. படித்துள்ளேன். மேற்படி கடனுறுதிசீட்டை எங்கு வைத்து நிரப்பினார்கள் என்றால் தெரியாது. எழுதி கொண்டுவந்ததில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். கடனுறுதிசீட்டில் எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் யாருடைய கையொப்பமும் இல்லை என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் எதிரி யாருடன் வந்தார் என்றால் அவரது கணவருடன் வந்தார். நான் சொல்வதுபோல் எதிரியும் அவரது கணவரும் புகார்தாரர் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ல் எனது கையொப்பம் எங்குள்ளது என்று சொன்னால் முதலாவது கையொப்பம் என்னுடையதாகும். பூர்த்தி செய்தது யார் என்று எனக்கு தெரியாது. கடனுறுதிசீட்டில் உள்ள எதிரியின் கையொப்பமும், காசோலையில் உள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் யாருடைய கையொப்பமும் இல்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது கல்லூரி நண்பர்.

2) புகார்தாரர் என் நண்பர் என்பதால் அவர் போலியாக உற்பத்தி செய்தக ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துவிட்டு புகார்தாரருக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் நண்பர் வீட்டில் வைத்துதான் பார்த்தேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)